# ஈழத்தில் இனப்படுகொலை! துரோகிகளின் பாசாங்கு!

**க**டந்த ஒரு மாத காலமாக பாசிச பிரேமதாசா கும்பல் ஈழத்தமிழர்கள் மீது நடத்திவரும் கொலை வெறியாட்டம், பாசிச ஜெயவர்த்தனே கும்பலின் அட்டூழிங்களையும் விஞ்சிவிட்டது.

"இது பயங்கரவாதிகளான புலிகளுக்கு எதிரான யுத்தம்; சிவிலியன்களுக்கு எதிரானதல்ல" என்று பசப்பிக் கொண்டே தரை, வான், கடல் என மும்முனைகளிலும் தாக்குதல் தொடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை குண்டுகளால் துளைக்கப்பட்ட மயான பூமியாக மாற்றியுள்ளது, பாசிச பிரேமதாசா கும்பல். புலிகளை ஒழிப்பது என்ற பெயரில் கொத்துக் கொத்தாக தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றும், பிணங்களை நட்ட நடுவீதியில் டயர்களைப் போட்டு எரித்தும் இனவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி கொள்ள முடியாத ஆத்திரத்தில் சிவிலியன்களைத் தாக்கி அழிப்பதையே சிங்கள ராணுவம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தரைப் படை மூலம் புலிகளை வீழ்த்த முடியாத தோல்வி ஜுரத்தில் போர் விமானங்கள் மூலம் பெட்ரோல் பேரலில் தீவைத்து வீசியும், ஹெலிகாப்டர்கள் மூலம் கண்மூடித்தனமாக குண்டுவீசி சிவிலியன்களை அழிப்பதையுமே சிங்கள ராணுவம் தனது போர்முறையாகக் கொண்டுள்ளது

தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்கு அஞ்சி பள்ளிகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்த மக்கள் மீதே சிங்கள ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. கோயில்களில் கூட தஞ்சம் புகவிடாமல் திருகோண மலை கோணேஸ்வரர் ஆலயத்தையே சிங்கள ராணுவம் பாசறையாக்கிக் கொண்டு தாக்குகிறது. ஈழத்தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் நோக்கத்தோடு தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போட்டும், அரிசி - உணவுப் பொருட்கள் - மருந்துப் பொருட்கள்கூட கிடைக்காமல் தடுத்தும் அட்டூழியம் புரிகிறது. பட்டினியால் பரிதவிக்கும் குழந்தைகளுக்காக பால் பவுடரையும் உணவுப் பொருட்களையும் கொண்டு சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரையே தாக்கி விரட்டுகிறது. அகதிகளாகத் தப்பியோடி வரும் ஈழத்தமிழர்களின் படகுகளின் மீதே குண்டு வீசித் தாக்கி இனவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது, சிங்கள கூலிப்படை. இதோடு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் சிலரைக் கொன்றும் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் பழியைப் புலிகள் மீது போட்டு இனக் கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளது பாசிச பிரேமதாசா கும்பல்.

ஆனாலும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பாசிச பிரேமதாசா கும்பலால் வெற்றி பெற முடியவில்லை. ஆயுதமேந்திப் போராடும் இளஞ்சிறுவர்களைப் பார்த்து, புலிகளின் இந்த "பேபி" (குழந்தை) படையினர் சிங்கள ராணுவத்தைப் பார்த்தால் சிறுநீர் கழித்து விடுவார்கள்" என்று ஏளனப்படுத்தினார் பிரேமதாசா. ஆனால் அந்த இளம்புலிகள்தான் இன்று சிங்கள ராணுவத்துக்கு தண்ணி காட்டுகிறார்கள். ஏறத்தாழ இரு மாதங்களாகியும் சிங்கள ராணுவத்தால் யாழ்கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. கிழக்கு மாகாணத்தையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியவில்லை. சிங்கள ராணுவத் தளபதியே வெளிப்படையாக தமது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார்.

பாசிச பிரேமதாசா கும்பலுக்கு எதிராக ராணுவ ரீதியில் புலிகள் தாக்குப் பிடித்து நின்ற போதிலும், அரசியல் ரீதியிலும் தார்மீக ரீதியிலும் பாசிச கும்பல் கட்டவிழ்த்து விடும் அவதூறு - பொய் பிரச்சாரத்துக்கு எதிராக வெற்றியை ஈட்ட முடியவில்லை. புலிகள் தமது பாசிச நடவடிக்கைகளால் இதர ஈழ விடுதலை இயக்கங்களின் ஆதரவைத் திரட்டத் தவறியிருப்பதே இதற்குக் காரணம்.

ஈழவிடுதலைப் போர் முன்னேறத் தொடங்கியதும் பாசிச பிரேமதாசா கும்பலுக்குப் போட்டியாக, இந்திய தேசிய வெறியர்களும், பாசிஸ்டுகளும் பத்திரிக்கைகளும் புலிகளுக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை நைச்சியமான முறையில் செய்யக் கிளம்பிவிட்டார்கள். புலிகளிடம் அமைதிப்படை' உதைபட்டுத் திரும்பியதால் ஏற்பட்ட ஆத்திரமும்,. அதைவிட ஈழ விடுதலைப் போர் வெற்றி பெற்றால் அதன் தாக்கம் காரணமாக இந்தியாவிலும் பல்

ஈழ விடுதலைப் போரை அழித்துவிட முடியாது. எழுகிறது புதிய தலைமுறை!



வேறு தேசிய இனங்களின் சுயநிர்ண
மைப் போர் தீவிரமாகிவிடும் என்கி
யும் காரணமாக இரட்டிப்பு வெறி
எதிர்க்கிறார்கள். இந்திய மண்ணில்
கள் குவிவதைக் கண்டு நீலிக்கண்ணீ
கும் அவர்கள், இதற்கெல்லாம் பு
தொடுக்கும் அனாவசியமான யுத்த
காரணம்; அவர்களால்தான் இந்த
நிலை ஏற்பட்டுள்ளது என்று கீழ்த்த
பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். இன்
ருபுறம் ஆயுதப் போராட்டத்தின் மூல
போதும் வெற்றி கொள்ள முடியாது;
துன்ப துயரமிக்க தற்கொலைப் பாதை;
ரக்கணக்கானோர் கடந்த ஏழாண்டுக
தியாகிகளாகிய போதிலும் இன்
வெற்றி பெற முடியாததற்கு இதுவே
ணம் — என்று புரட்சிப் பாதையில்
கும் இளைஞர்கள் மீது உளரீதியான
தைத் தொடுக்கின்றனர்.

இருப்பினும், இனத்துரோகியாக
பலப்பட்டுப் போயுள்ள கருணாநிதி
தில் நடக்கும் இனப்படுகொலையைக்
டித்து கடையடைப்பு போராட்டத்தை
வித்து ஆதாயம் தேடமுயன்
அனைத்து ஓட்டுக்கட்சிகளும்
வாத நோக்குடன் இதை ஆதரித்து
யும் ஈழவிடுதலை ஆதரவாளராக கா
கொள்ள முயல்கின்றன. ஆனால் இவ
எவருமே ஈழவிடுதலைப் போரை ஆத
வர்கள் அல்ல; இனப்படுகொலை
ஒடுக்குமுறைக்கும் ஓரே தீர்வாக அ
சுயநிர்ணய உரிமையை ஏற்பவர்களு
பாசிச பிரேமதாசா கும்பலுடன் சமரசமா
போய், ஈழத்தமிழர்களின் உரிமை
அடகு வைத்து 'அரசியல் தீர்வு'
வேண்டும் " என்றுதான் கோருகின்
ஆயிரக்கணக்கில் அகதிகளாகக் கு
ஈழத்தமிழர்களுக்காக நீலிக்கண்
வடித்து ஆறுதல் கூறியதைத் தவிர
ஓட்டுக்கட்சிகளும் கருணாநிதி அரசு
மண்ணும் செய்யவில்லை. தட்டுமு
சாமான்களையும் சோப்பு - சீப்பு - ப
ளையும் அற்ப விலைக்கு விற்று அ
தமது வயிற்றைக் கழுவுகின்றனர். அ
முகாம் என்ற பெயரிலுள்ள வெட்ட
பொட்டல்களில் தமது பிஞ்சுக் குழந்தை
டன் அல்லற்படுகின்றனர்.

துன்பமும் துயரமும் வேதனை
தொடர்ந்து வாட்டினாலும் ஈழமக்
தேசிய இன உரிமைப் போரை ஒருபோ
அடக்கிவிட முடியாது. ஈழ விடுத
போர் உள்ளிட்டு எந்த ஒரு இனவிடுதலை
கான கொரில்லா போராட்டத்
ராணுவ ரீதியில் வெற்றி கொண்டதாக
கில் எங்குமே வரலாறில்லை. ராணு
யில் வலுவான பிரிட்டிஷ் ஏகாதிபத்
கூட உள்நாட்டில் தொடரும் ஐரிஷ்
உரிமைப் போராட்டத்தை அழிக்க
வில்லை. இந்தியாவிலும் கடந்த 40 ஆ
களாகத் தொடரும் காஷ்மீர் மற்றும்
ழக்கிந்திய மக்களின் சுயநிர்ணய உ
போரை வேரறுக்க முடியவில்லை.
பாசிச பிரேமதாசா கும்பல் தொடுக்கு
தத்தின் மூலம் ஈழ விடுதலைப் போர்
லிகமாக பின்னடையலாமே தவிர
ஒருக்காலும் அழித்தொழிக்க முடியா
■